# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1993 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க,
# பிரசாவுரிமை (திருத்தச்) சட்டம்

---

*[1993, மார்ச் மாதம் 31 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

*1993, ஏப்பிறல் மாதம் 02 ஆந் தேதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

**கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.**

விலை : சதம் 45 தபாற் செலவு : ரூபா 1.00

1993 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரசாவுரிமை
(திருத்தச்) சட்டம்

[1993, மார்ச் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஓ. 108/90

பிரசாவுரிமைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டமானது 1993 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரசாவுரிமை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும் 1987 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான பிரசாவுரிமைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:— 349 ஆம் அத்தியாயத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(8) எவ்வாள் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழ் வெளிப்படுத்துகையொன்று செய்யப்பட்டுள்ளதோ அவ்வாள் ஒவ்வொருவரும் அத்தகைய வெளிப்படுத்துகை தொடர்பில் விதித்துரைக்கப்பட்ட வீதங்களுக்கிணங்கவுள்ள கட்டணமொன்னை விதித்துரைக்கப்பட்ட முறையில் செலுத்துதல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"கட்டணங்கள். 26. எவ்வாளுக்கு இச்சட்டத்தின்கீழ் சான்றிதழ் ஒன்றானது வழங்கப்பட்டதோ அல்லது எவ்வாள் தொடர்பில் 19 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் வெளிப்படுத்துகையொன்று செய்யப்பட்டுள்ளதோ அவ்வாள் ஒவ்வொருவரும், விடயத்திற்கேற்றுற்போல், அத்தகைய சான்றிதழ் அல்லது வெளிப்படுத்துகை தொடர்பில், விதித்துரைக்கப்பட்ட வீதங்களுக்கிணங்கவுள்ள கட்டணமொன்றை விதித்துரைக்கப்பட்ட முறையில் செலுத்துதல் வேண்டும்.".

4. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர், முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் வாசகத்தின் (2) ஆம் உட்பிரிவின் அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட பிரகடனமொன்று தொடர்பாக எவரேனும் ஓர் ஆளுக்கு செலுத்தப்பட வேண்டுமென விதித்துரைக்கப்பட்டு செல்லுபடியாகுந் தன்மை.

அறிவிடப்பட்ட எல்லாக் கட்டணங்களும், செல்லுபடியாகுமென விதித்துரைக்கப்பட்டு அறிவிடப்பட்டதாகவும், அத்துடன் விதித்துரைக்கப்பட்டு அறிவிடப்படுகின்றதாகவும், எல்லா விடயங்கள் தொடர்பிலும் கருதப்படல் வேண்டும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

5. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.